அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 304

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 07
09. செப்டம்பர், 1985.

அமைச்சுக்களின் செயலாளர்கள் அனைவருக்கும்.

கடமை நிமித்தமாக வெளிநாடு செல்லும் இணைந்த
சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு லீவு
வழங்குவதற்கு அனுமதி

இணைந்த சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் பற்றிய வரையில் வெளிநாடு செல்வதற்கு பிரதம அமைச்சரின் செயலாளர் மூலம்

கௌரவ பிரதம அமைச்சரின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு முன் லீவு சம்பந்தமாக எனது அனுமதியைப் பெறவேண்டும் என்பது அவசியமில்லை.

02. எனினும் விடுமுறை அனுமதிக்கப்பட்டதன் பின் உத்தியோகத்தரின் சேவையும் அல்லது பிரயாணமும் பற்றிய விவரங்களை எனது பதிவுகளில் சேர்த்துக் கொள்வதற்காகத் திணைக்களத் தலைவர் எனக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

03. கௌரவ பிரதம அமைச்சரின் அங்கீகாரத்தை பெறும்/ எல்லா விண்ணப்பப் படிவங்களும் தாபனக் கோவையின் XV -ஆம் அத்தியாயத்தின் 10.5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். அதாவது உத்தியோகத்தர் நாட்டை விட்டு போவதற்குகுறைந்தது பத்து நாட்களுக்கு (10) முன் பொருத்தமான முறையில் பிரதம அமைச்சரின் செயலாளரை அடையுமாறு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

04. இந்தச் சுற்றறிக்கையானது பிரதம அமைச்சரின் செயலாளருடைய சம்மதத்துடன் வெளியிடப்படுகிறது.

ஒப்பம்: டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.